# கவிஞர் நடராஜன் (Nats)




நெல்லை மண்ணைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், இன்றையத் தஞ்சை மாவட்டத்தின், பாபநாசத்தில் பள்ளிக் கல்வியை முடித்து பூண்டி புட்பம் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்து, சென்னை சுங்கத்துறையில் பணியில் சேர்ந்து, தற்போது கண்காணிப்பாளராக பணியைத் தொடர்கிறார். ஓர் அருமையான படைப்பாளர். ஆற்றொழுக்குப் போன்றதொரு நடை. அவருடைய உரைநடை இலக்கியம், படிக்கும்காலை சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை யவர்களை நினைவு படுத்தும். கவிதை புனைதலிலும் வல்லவர். சொல்லவரும் கருத்தைச் செவ்வனே பதிதலில் திறம் கொண்டவர். தொடங்கினால், படிக்காமல் நிறுத்த முடியாத வகையில் அவரது, நடை இருக்கும். கவிதையும் அங்ஙனமே.

அவரது கட்டுரைகள் பெரும்பாலும், வாழ்வியலை ஒட்டியே அமையும். தனது கடந்தகால நினைவுகளைக் காலப் பரிணாமத்தோடு, வெகு நேர்த்தியாக விளக்குவார். அற்றை நாளின் திருவிழாக்கள், பண்டிகைகள், விடுமுறை நாட்கள் இப்படியெல்லாம் எழுதும் போது, நம்மை, 25 ஆண்டுகளுக்கு பின்னோக்கி அழைத்துச் செல்வதுடன், குடந்தை, பாபநாசம் வீதிகளில் உலாவச் செய்வார். ஒவ்வொரு காட்சியையும் படிமங்களாக விளக்கும் போது, கை கோத்துக் கொள்ளாமலேயே நாம் அவரோடு உலா வருவோம்.

அவரது கட்டுரைகள், தனியே கட்டுரைப் பகுதியில் வெளியாகின்றன. ஈண்டு, அவரது கவிதைகள் மட்டுமே வெளியாகின்றன. அவற்றை நீங்களும் படித்துச் சுவையுங்கள். யாவும் ஒன்றன் பின் ஒன்றாக, கீழே இடம் பெறுகின்றன.




# நிலாக்கால நினைவுகள்

மழை தரும் பரவசம் போன்றே,
நிலாக்காலங்கள் குறித்தும்;
நீங்கா நினைவுகளிருக்கிறது!

பால்யங்களின் விடுமுறைக்கால,
கண்ணாமூச்சி ஆட்டத்தில்;
எங்களோடு நிலவும் ஒளிந்து விளையாடியிருக்கிறது!

மொட்டைமாடியில்,
வட்டமாயமர்ந்திருக்க;
அம்மாக்கள் உருட்டித் தரும் கூட்டாஞ்சோறில்,
ஒரு கையுருண்டை நிலவுக்குமுண்டு!

வாசலில் பாய்விரித்துச் சுற்றித்தரையமர்ந்து,
ஆச்சிமார்கள் சொன்னக் கதைகளை;
நிலவும் வானிருந்து கேட்டதுண்டு!



இரவின் தனித்த பயணங்களில்,
துணையாய் நெடுந்தூரம்;
கூடவே வந்திருக்கிறது நிலவு!

அசுரத்தனமாய், அடித்துப்பெய்து;
திகில் வெள்ளம் பெருக்கிட்டப்
பெருமழை போலன்றி,
சாத்விகமானது நிலவு!

ஆயினும்,
இன்றேனோ குழந்தைக்குச் சோறூட்ட,
நிலவைத் தேடுவதில்லை;அம்மாக்கள்...!

காதலுக்குத் தூதாய்,
இளையநிலா பொழிய வேண்டி,
கவிதைகள் எதுவும் எழுதப்படுவதில்லை!

நம்மோடு உறவாடியதால்,
நிலவுக்கும் வயசாகிப்போனதோ?

கான்கிரீட் உச்சங்கள் தாண்டி
கண்மறைவாய் உலவும் நிலவைக்
கடைசியாய்ப் பார்த்ததென்னாள்?

காண வாய்க்கும் போதெல்லாம்
பால்ய நினைவுகளை தட்டியெழுப்பும்
நிலவை நின்று ரசிக்கவும்
நேரமின்றி......,

**Nats**.. 09-05-2020

## சுகமான காத்திருப்புகள்!

ஆறாம் வகுப்பில்
கணக்கு வாத்தியார்,
"நாளைக்கு ஜாமெட்ரி பாக்ஸ் கொண்டு வா"
என்றதைக் கூறியதும்,

அப்பா சொன்னார்;
"ஒண்ணாந்தேதி வாங்கித்தரேண்டா"
மழையில் பிய்ந்துபோன,
செருப்பை தெருமுனையில்,
தைத்துப்போட்டாயிற்று..!
புதுச்செருப்பு?..

ஒண்ணாந்தேதி,
சம்பளம் வந்ததும்;
நோட்டுப்புத்தகம்..
புத்தகப்பை...
புத்தாடைகள்....
கும்பகோணத்தில்
புது சினிமா.....
எதுவுமே நினைத்தவுடன்
கிடைத்ததில்லை!...

ஆனாலும்,
அந்த
எதிர்பார்ப்புக் கனவுகளில்
இனம்புரியாதொரு பரவசம்....!

"அப்பா.. அமேஸானில்
ஆர்டர் பண்ணியிருக்கிறேன்..
இன்று வரும்...
வாங்கி வை!"
என்றுச் சொல்லி விட்டுப்போகும்,
மகனுக்குத் தெரியுமா
அந்தக்
காத்திருப்பின்
சுகம்?

-நட்ஸ்-
(கவிதைக்களம் 30-09-2018)



அண்ணாநகரில்
மிதமழை.
கடினகாலத்தில்
பால்யநண்பனின்
அண்மைபோல்--
மண்வாசம்.
மழைக்காதலே,
சாளரத்தின் வழியாகத்தான்
சரசம்.
வாசல் திறக்கவில்லை.
வைரஸ்
சிறையில் வாசம்.
09-04-2020

